<u>சுருக்கம்</u>

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – 2009-2010–ம் ஆண்டு பகுதி II திட்டம் மேட்டூரில் அமைந்துள்ள ஸ்டேன்லி அணையின் இடதுபுறமலை பகுதியினை ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் க்ரௌட்டிங் (Grouting) மூலம் பலப்படுத்துதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (என்.1) துறை

அரசாணை (நிலை) எண். 143 நாள் 4.8.2009

படிக்கவும்:

தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை கடித எண்.எப்/9000/2008, நாள். 20.1.2009.

---

<u>ஆணை</u>:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் நீர்வள ஆதாரத் துறையின் தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள், மேட்டூரில் அமைந்துள்ள ஸ்டேன்லி அணையின் இடது புறமலை பகுதியினை க்ரௌட்டிங் (Grouting) மூலம் பலப்படுத்த ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மேலும் அவர் இப்பணிக்கான விவரங்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:- தமிழ்நாட்டில், சேலம் மாவட்டத்தில் மேட்டூரில் அமைந்துள்ள ஸ்டேன்லி அணை (மேட்டூர் அணை) காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட அணை ஆகும். இந்த அணை 5300 அடி நீளமும் 169 அடி உயரமும் கொண்டது எனவும் இந்த அணையில் 120 அடி உயரம் வரை நீர் தேக்கம் செய்யலாம் என்றும் அவ்வாறு தேக்கப்படும் நீரின் கொள்ளவானது, 93470 மில்லியன் கன அடியாகும். எனவும் இந்த அணையிலிருந்து பாசனத்திற்காக திறந்து விடும் தண்ணீரிலிருந்து மின் உற்பத்தியும் செய்யப்படுகிறது. எனவும் இந்த அணையின் நீர் மட்டம் 85.00 அடி உயரும்போது அணையின் வெளிபுறம் (Down Stream side) இடது கரையில் நீர்க்கசிவு தென்படுகிறது என்றும் காவிரி தொழில் நுட்பகுழும தலைவர் அவர்கள் மேட்டூர் அணைக்கு 17.11.2006 மற்றும் 18.11.2006 அன்று வருகை தந்த போது மேற்கண்ட நீர்க்கசிவு பற்றி ஆய்வு செய்து அதனை தடுப்பதற்குண்டான வழிமுறைகளை செய்வதற்கு அறிவுரைகள் வழங்கினார்கள் என்றும் அதன்படி நீராய்வு மற்றும் காற்றாய்வு (Airtest) செய்து க்ரௌட்டிங் செய்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது என்றும் இம்மதிப்பீட்டில் கீழ்கண்ட முக்கிய இனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

1. மலையின் மேற்பரப்பிலிருந்து +796 அடி வரை 100 மி.மீ. அளவுள்ள சாதாரண துளையிடுதல் (அணையின் முழுமட்டம் 790 அடி, அணையின் அதிகபட்ச நீர் அளவு + 796 அடி).

2. +796 அடி முதல் +745 அடிவரை (தற்போது நீர்க்கசிவு தென்படும் அளவிற்கு கீழ் பத்து அடிவரை க்ரௌட்டிங் (Grouting) செய்யக்கூடிய 100 மி.மீ. அளவுள்ள துளையிடுதல்.

3. இரண்டாவதாக சொல்லப்பட்ட துளைகளில் அதிக அழுத்தத்துடன் க்ரௌட்டிங் (Grouting) (Pressure Grouting) செய்வது.

3. இப்பணிகளுக்கான மதிப்பீடு வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை 2009—2010 ஆம் ஆண்டில் ரூ.60.00 இலட்சம் ஆகும், எனவும், இத்திட்டம் திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர், அவர்களால் செயலாககப்படும், எனவே இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட திட்டத்தினை 2009—2010ம் ஆண்டு பகுதி—II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக்குழு (Standing finance committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி சேலம் மாவட்டம் மேட்டூரில் அமைந்துள்ள ஸ்டேன்லி அணையின் இடதுபுற மலைப்பகுதியினை க்ரௌட்டிங் (Grouting) மூலம் பலப்படுத்துதல் பணிக்கு ரூ.60 இலட்சம் (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் தொடர்பாக, சில்லறை செலவினங்கள், சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்த இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள் மொத்த பணி செலவுத் தொகையில் (Work Estimate) 2.5%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேற்கண்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

4702—00 சிறு பாசனம் குறித்த மூலதனச் செலவு – 101— மேற்பரப்பு நிர்— பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநில திட்டம் — JA சிறுபாசனத் சிறப்புத் திட்டம் — 16 பெரும்பணிகள் (த.தொ.கு 4702—00—101 JA- 1607).

5. தலைமைப்பொறியாளர், திருச்சி மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்தி, திட்டப்பணி முன்னேற்றம் குறித்த அறிக்கையை உடனுக்குடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.32856/PW II/09 நாள். 17.6.2009 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர்,
நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர்,
நீர்வள ஆதார அமைப்பு, திருச்சி மண்டலம், திருச்சி–20.
நகல்கள்
பொதுப்பணித்துறை, ஐ ஸ்பெஷல் பிரிவு, சென்னை–9.
நிதி (பொ.ப.II/வ.செ.பொ.II)த்துறை, சென்னை–9.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–9.
மாநிலக் கணக்காயர், சென்னை 18/35.
அனைத்து பிரிவுகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்